# காலாண்டு பொதுத்தேர்வு - 2019

# பொதுத்தமிழ் - மேனிலை இரண்டாமாண்டு

## விடைக்குறிப்பு

பலவுள் தெரிக. (பகுதி –1) **(14 x1 = 14)**

1. ஈ) 2 3 4 1
2. இ) இராமன், சுக்ரீவன்
3. ஆ) காவியம்
4. ஆ) கணிதம்
5. ஆ) மணல் அள்ளுதல்
6. அ) வடசென்னைப் பகுதிகள்
7. இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது
8. ஆ) உயர்திணை, அஃறிணை
9. ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
10. இ) நிறுத்தக்குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்
11. அ) செப்பலோசை
12. இ) காட்சி
13. ஆ) அடுக்குத்தொடர்
14. ஆ) பூமணி

**பகுதி 2** **12x2=24**

**பிரிவு 1 (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்)**

15. அய்யப்ப மாதவன்கவிதைகள், அய்யப்ப மாதவன்
16. ஒருவன் தன்னைத் தானே காக்க வேண்டும் என்றால், தன் சினத்தைக் காக்க வேண்டும் .
17. கலைத்தொழில் வல்ல புலவர்களுக்கு, எத்திசை சென்றாலும் அத்திசையில் உணவு கிடைக்கும்.
18. **கலிவிழா, ஒலிவிழா**
    - **கலி விழா –** எழுச்சி தரும் விழா
    - **ஒலி விழா –** ஆரவாரம் நிறைந்த விழா.

**பிரிவு 2 ( எவையேனும் இரண்டனுக்கு மட்டும்)**

19. **நடை அழகியல்**
    - அழகியலை உருவாக்குவதற்குத் தளம் அமைத்துத் தருகின்றது, தொல்காப்பியம்.
    - எழுத்தையும் சொல்லையும் போன்றே செய்யுளையும் ஓர் உள்ளமைப்பாகத் தொல்காப்பியம் கொண்டுள்ளது.

20.

21. **கீழ்த்திசைச் சுவடிகள்**

- ❖ காலின் மெக்கன்சியின் தொகுப்புகளை அடிப்படையாகக்கொண்டு **1869**இல் இந்நூலகம் உருவாக்கப்பட்டது.
- ❖ அரிய ஓலைச்சுவடிகள், தாள் சுவடிகள், புத்தகங்கள் எனப் பெரும் தொகுப்புகளைக் கொண்டது.

**பிரிவு – 3 (எவையேனும் ஏழனுக்கு மட்டும்)**

**22. களம் –** இடம்
**கலம் –** பாத்திரம்

**23. திருவளர் செல்வன்**

- ❖ “திருவளர் செல்வன் என்பதே சரியான தொடராகும்.
- ❖ வினைத்தொகையில், வல்லினம் மிகாது

24. **வெண்பாவிற்குரிய தளைகள்**

- ❖ இயற்சீர்வெண்டளை
- ❖ வெண்சீர் வெண்டளை

25. வினைப்படிமம்

**26. புணர்ச்சி விதி**

**பூம்பாவாய்** = **பூ**+**பாவாய்**
**விதி –** பூப்பெயர் முன் இனமென்மையும் தோன்றும்

27. பகுபத உறுப்பிலக்கணம்

விம்முகின்ற = **விம்மு**+**கின்று**+**அ**

**விம்மு** **–** பகுதி
**கின்று** - **நிகழ்கால இடைநிலை**
**அ** - **பெயரெச்ச விகுதி**

**28. எழுத்து வழக்கு**

வீட்டருகில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தையை அப்பா எங்கே இழுத்துக்கொண்டு போனார் **?**

**29. பிழைகளை நீக்கி எழுதுதல்**

**அ)** ஒவ்வொரு **வீட்டிலும்** நூலகம் உள்ளது.
**ஆ)** நான் **வெந்நீரில்** குளித்தேன்

**30.** வல்லின மெய்களை இட்டு எழுதுதல்

அ) பாடலைப் பாடினான்
ஆ) தேருக்குச் சென்றான்

**பகுதி – 3** (7x 4 = 28)

**பிரிவு – 1 ( எவையேனும் இரண்டனுக்கு மட்டும்)**

**31. வாடைக்காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடிய விதம்**

- ❖ மேகமானது, உலகம் குளிருமாறு பொழிந்த புதிய மழையால், தாழ்வான பகுதிகளில் பெருகிய வெள்ளத்தை வெறுத்த, ஆயர் எருமை, பசு, ஆடு ஆகிய நிரைகளை வேறு மேடான நிலங்களில் மேய விட்டனர்.
- ❖ தாம் பழகிய நிலத்தை விட்டுப் பெயரும் நிலையால் வருத்தம் அடைந்தனர்.
- ❖ அவர்கள் தலையில் சூடியிருந்த காந்தள் மாலை கசங்கியது.
- ❖ பலருடன் சேர்ந்து கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றியபோதிலும், அவர்களது பற்கள் நடுங்கின.

**32. “மூன்றான காலம் போல் ஒன்று”**

- ❖ எண்ணம், வெளியீடு, கேட்டல்
- ❖ காலம் என்பது இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என வேறுபடுவதுபோல், கவிஞனின் உள்ளத்தில் எழுகின்ற எண்ணமும், அது கவிதையாய் வெளிப்பவதும், அதைக் கேட்டு உள்வாங்குவாங்கலும் நிகழும் இடத்தால் வேறுபடுவதால், மூன்றான காலம் போல் தோன்றுகின்றன.

**33. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம்,**

- ❖ ஒரு நெறிப்பட்ட மனதுடன் நின்னுடைய மலர் போன்ற திருவடிகளை நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும்.
- ❖ உள்ளத்தில் ஒன்றும் புறத்தில் ஒன்றுமாக வைத்துப் பேசும் வஞ்சக உறவு என்னைப் பற்றாதவாறு காக்க வேண்டும்.
- ❖ இத்தகைய சிறப்புகளை நீ எனக்கு அருள்வாயாக ! என்று கேட்கிறார்.

**34. “ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்”**

**இடம் :**‘ஓங்கலிடை’ எனத் தொடங்கும் தண்டியலங்கார உரை மேற்கோள் பாடலில் இடம் பெற்றுள்ளது.

**பொருள் :** சூரியனும் தமிழும் கடலால் சூழப்பட்ட இவ்வுலகத்தில் உள்ள இருளைப் போக்கும் தன்மை வாய்ந்தன.

**விளக்கம்** சூரியன், தன் கதிர்களால் உலகில் உள்ள புற இருளைப் போக்கும்.

தமிழ், மக்களின் அக இருளைப் போக்கி அறியாமையை அகற்றும் சிறப்புடையது.

**பிரிவு – 2 ( எவையேனும் இரண்டனுக்கு மட்டும்)**

**35. சங்கப்பாடல்களில் ஒலிக் கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும்**

- எந்த தொன்மையான மொழியும் சமக்ஞையிலிருந்தும் இசையிலிருந்தும் தான் தொடங்குகிறது. ஓசையும் பொருளும் இணைந்து கலை வடிவம் கொள்கின்றன. இதையே ஒலிப்பின்னல் என்கிறோம்.
- **“கடந்தடு தானை மூவிருங்கூடி**
  **உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே”**
  என்ற வரிகளில், வல்லின மெய்கள் மிகுந்து வருதலைக் காணலாம்.
- **“படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்**
  **கடாஅ யானைக் கலிமான் பேக”**
- **“புணரின் புணராது பொருளே”**

போன்ற பாடல் வரிகளில் உயிரொலிகள் குறிப்பாக நெடில் ஒலிகளின் வருகையும், சில ஒலிகளும் சில சொற்களும் திரும்பவரல் தன்மை பெற்றிருப்பதும் இவற்றோடு சேர்ந்து நிகழ்த்தப்பெறும் சொல் விளையாட்டுகளும் இங்கே கவனத்திற்குரியன. இந்த ஒலிக்கோலம் சங்கப்பாடல்களில் முக்கியப் பண்பென அறியமுடிகிறது.

**36. ஏற்ற விடையிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்.**

**37. மழை வெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்**

- பேரிடர் காலங்களில் தாங்கக்கூடியவையாகப் புதிய கட்டுமானங்ளை அமைக்க வேண்டும்.
- நீர்வழிப் பாதைகளுக்கான தெளிவான வரைபடம் உருவாக்கப்பட்டு அப்பாதைகளைத் தொடர்ந்து பராமரிக்க வேண்டும்.
- கடற்கரை ஓரங்களில் சதுப்பு நிலக் காடுகளை வளர்த்தல் வேண்டும்.

**38. அறிவின் நகரம்**

- 1715இல் உருவான ‘புனிதமேரி தேவாலய தர்மப் பள்ளி’
- 1812 இல் உருவான ‘ சென்னைக் கோட்டைக் கல்லூரி’
- 1837இல் தொடங்கப்பட்ட கிறித்துவக் கல்லூரி
- 1840இல் உருவான பிரசிடென்சி பள்ளி
- 1857– சென்னைப் பல்கலைக்கழகம்

- ❖ 1914 – இராணிமேரி கல்லூரி
- ❖ பச்சையப்பன் கல்லூரி

பிரிவு – 3 **( எவையேனும் இரண்டனுக்கு மட்டும்)**

**39. ஏகதேச உருவக அணி**

**அணி இலக்கணம் :** கவிஞர் தான் கூறும் பொருளில் ஒன்றை உருவகம் செய்து, மற்றொன்றை உருவகம் செய்யாமல் விடுவது ஏகதேச உருவக அணியாகும்.

**சான்று :**

சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்

**அணிப் பொருத்தம் :** கவிஞர் சினத்தை நெருப்பாக உருவகிக்காமல் இனத்தைத் தெப்பமாக உருவகம் செய்தமையால் ஏகதேச உருவக அணி ஆயிற்று.

**(அல்லது)**

**பொருள் வேற்றுமை அணி**

**அணி இலக்கணம்:** இருவேறு பொருள்களுக்கிடையே ஒற்றுமையை முதலில் கூறிப் பின் வேறுபடுத்திக் காட்டுவது

**சான்று:**

**ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி**
**ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும்– ஆங்கவற்றுள்**
**மின்னோர் தனியாழி வெங்கதிரரொன்(று) ஏனையது**
**தன்னேர் இலாத தமிழ்!**

**பொருத்தம்:** தமிழுக்கும் கதிரவனுக்கும் இடையே உள்ள பயன் சார்ந்த ஒற்றுமையை முதலில் கூறி அவற்றுள் தமிழ் தன்னேரில்லாதது என்ற தன்மையைப் பின்னர் வேறுபடுத்திக் காட்டுவதால் பொருள் வேற்றுமையணி ஆயிற்று.

**40. இலக்கிய நயம் பாராட்டல்**

- ❖ **எதுகை** வெட்டி /கொட்டி
  சட்டச்சட / எட்டு

- ❖ **மோனை** வீரத் – விண்ணை

  கூவென்று – குடையுது

- ❖ **அணி** உயர்வு நவிற்சி அணி

**41. ஏற்ற கவிதையிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்.**

செந்தமிழ் (அ) நிலா

42. தமிழாக்கம்

1. **கற்றல் என்பது பெரிய செல்வம் ; அச்செல்வம், எப்போதும் கற்பவரை அது தொடர்ந்து செல்லும்.**
2. **புதுமொழி என்பது புதுவாழ்க்கையைப் போன்றது.**
3. **மக்கள் உன்னைப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால், நீ அவர்கள் மொழியில் பேசு.**
4. **பன்மொழி அறிவு என்பது, அறிவு வளம்பெற வாயிலாகும்.**

43. பழமொழிக்கேற்ற கதையிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்
பழமொழி விளக்கம் **– 1** மதிப்பெண்
வாழ்க்கை நிகழ்வு **– 3** மதிப்பெண்

**பகுதி – 5**

**47. மனப்பாடப்பகுதி** **(1 x 4 = 4)**

**அ) கம்பராமாயணம்**

‘துன்பு உளதுஎனின் அன்றோ
சுகம் உளது **?** அது அன்றிப்
பின்பு உளது; இடை மன்னும்
பிரிவு உளது எனஉன்னேல்;
முன்பு உளெம் ஒரு நால்வேம்
முடிவு உளது எனஉன்னா
அன்பு உள, இனி, நாம் ஓர்
ஐவர்கள் உளர் ஆனோம்.

**பா வகை: கலி விருத்தம்**

ஆ) தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால் **(1 x 2 = 2)**
தன்னையே கொல்லும் சினம்.